INSTITUTE FOR HEALTH POLICY

**72, Park Street, Colombo 2, Sri Lanka**
Tel: +94 11 231 4041/2/3/5 Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk web: www.ihp.lk twitter: @ihplk

# ஊடக அறிவிப்பு

**திகதி வரை தடையாணை**

திகதி : 11 October 2024
நேரம் : 3:00 PM Sri Lanka Time

**மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்**

செயலாளர்/நிர்வாகி
மின்னஞ்சல் : info 'at' ihp.lk

**பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள**

மருத்துவர். ரவி ரன்னன்-எலிய
மின்னஞ்சல் : ravi 'at' ihp.lk ட்விட்டர் : @ravirannaneliya

# பிரதமராக ஹரிணி அமரசூரிய பிரபலமான தேர்வு

*2024 இல் SLOTS தொடர்ந்தவர்களில் ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க, பிரதமர் ஹரினி அமரசூரிய மற்றும் அலி சப்ரி குறைந்த அளவில் பிரபலமற்றவர்களாக காணப்பட்டனர்.*

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நடத்தப்பட்ட 2024 ஆம் ஆண்டு IHP SLOTS கருத்துக்கணிப்பில் அனுர குமார திசாநாயக்க, ஹரினி அமரசூரிய மற்றும் அலி சப்ரி ஆகியோர் தொடரப்பட்ட மிகவும் பிரபலமான அரசியல்வாதிகளாகக் காணப்பட்டனர். அனுர குமார திசாநாயக்கவுக்குப் அடுத்தபடியாக, ஹரிணி அமரசூரியாவின் பிரபலம் அதிகமாக இருந்தது. இது அவர் பிரதமர் பதவிக்கு பிரபலமான தேர்வாக இருப்பார் என்பதனைக் குறிக்கின்றது.


ஒட்டுமொத்தமாக, SLOTS மூலம் தொடரப்படும் அனைத்து அரசியல்வாதிகள் மீதும் இலங்கை மக்கள் இன்னும் சாதகமற்ற கருத்துக்களைக் கொண்டிருக்கின்றனர். பெரும்பாலானவர்களின் நிகர சாதகத்தன்மை மதிப்பீடுகள் -30% க்கும் குறைவாக இருந்தன. அனுர குமார திசாநாயக்க மற்றும் ஹரினி அமரசூரிய ஆகியோரின் நிகர மதிப்பீடுகள் -10% மற்றும் அலி சப்ரி மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோர் முறையே -29% மற்றும் -31% நிகர மதிப்பீடுகளுடன் காணப்பட்டனர்.

SLOTS தொடர்ந்த அனைத்து எஸ்.எல்.பி.பி அரசியல்வாதிகளிலும் அலி சப்ரி மிக உயர்ந்த சாதகத்தன்மை மதிப்பீட்டைக் பெற்றிருந்தார். அவர் பாராளுமன்றத்தில்

இருந்து ஓய்வு பெறுவது அவரது கட்சிக்கு இழப்பாக இருக்கலாம் என்பதனை இது குறிக்கலாம்.

தொடரப்பட்ட பெரும்பாலான அரசியல்வாதிகள் மிகவும் பிரபலமற்றவர்களாகவும், அவர்களின் நிகர சாதகத்தன்மை மதிப்பீடு -50% க்கும் குறைவாகக் காணப்பட்டது. இந்த அரசியல்வாதிகளைப் பற்றிய பொதுமக்களின் சாதமற்ற கருத்துக்கள், சாதகமான கருத்துக்களை விட ஐந்து மடங்கு அதிகமாக இருந்தன. பொதுவாக, அலி சப்ரி, ஹர்ஷ டி சில்வா, வைத்தியர் சுதர்ஷனி பெர்னாண்டோபுல்லே மற்றும் பேராசிரியர் ஜயசுமண ஆகியோர் போன்ற தொழில்வல்லுனர்கள் ஏனைய அரசியல்வாதிகளை விட உயர்ந்த சாதகத்தன்மை மதிப்பீடுகளைக் கொண்திருந்தனர்.

இந்த ஆண்டில் தொடரப்பட்டவர்களில் மிகவும் பிரபலமற்ற அரசியல்வாதிகளாக பசில் ராஜபக்ச (-74%), கான்சன விஜேசேகர (-65%), நாமல் ராஜபக்ச (-63%), மற்றும் பிரசன்ன ரணதுங்க (-63%) ஆகியோர் காணப்பட்டனர்.




IHP 2024 இல் 20 செயலில் உள்ள அரசியல்வாதிகளின் சாதகத்தன்மையை தொடர்ந்து மதிப்பிட்டது. இதில் சமீபத்திய ஜனாதிபதிகள் மற்றும் பிரதமர்கள், முக்கிய கட்சித் தலைவர்கள், தற்போதைய மற்றும் சமீபத்திய சுகாதார அமைச்சர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிற பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் அடங்குவர். இந்தப் பட்டியல் விரிவானதாக இருக்கும் நோக்குடன் அமைக்கப்படவில்லை, மேலும் இதில் இன்னும் பிரபலமான அரசியல்வாதிகள் தொடரப்படாமல் இருக்கலாம் என்பதும் சாத்தியமாகும். அனைத்து சாதகத்தன்மை மதிப்பீடுகளும் தேசிய மக்கள்தொகையுடன் பொருந்தக்கூடியவாறு வயது, பால்நிலை, இனம், மாகாணம், வருமானத் தரவரிசை, கல்வி மற்றும் துறை போன்றவற்றுடன் பொருந்துமாறு எடையிடப்பட்டுள்ளன.

## முழு அறிக்கை

Institute for Health Policy, October 2024, “Harini Amarasuriya a popular choice for Prime Minister” *Available at :* https://ihp.lk/sites/default/files/press-release/SLOTSReport202414.pdf

## முந்தைய அறிக்கைகள் ihp.lk விலிருந்து கிடைக்கும்

Institute for Health Policy, March 2023, “Public continue to hold deeply unfavourable views of almost all politicians across all parties”, SLOTS Report #2023-07. *Available at https://www.ihp.lk/publications/docs/SLOTSReport202307.pdf*

Institute for Health Policy, April 2022, “Economic crisis results in growing public disaffection with politicians, but particularly with President Rajapaksa”, SLOTS Report #2022-04. *Available at: https://www.ihp.lk/publications/docs/SLOTSReport202204.pdf*

## IHP பற்றி

IHP கொழும்பு, இலங்கையில் உள்ள சுயாதீனமான மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிபுகளில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு மூன்று தசாப்தங்களாக பல்வேறு ஆய்வுகளை நடத்திவருகிறார்.

## முறைமை

SLOTS ஆனது எழுமாற்றாக அழைக்கப்பட்ட கைத்தொலைபேசி இலக்கங்கள் மூலம் தொடர்புகொள்ளப்பட்ட வயது வந்தவர்கள் (18 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள்) , மற்றும் கள ஆய்வு மூலம் முன்னர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட தேசிய பதிலளித்தவர்களின் தேசிய குழாமில் உள்ளவர்களையும் ஆய்வு செய்கின்றது. பதிலளிப்பவர்களிடம் ஒரு பொது நபர் அல்லது நிறுவனம் பற்றி அவர்களுக்கு சாதகமான அபிப்பிராயம் உள்ளதா அல்லது சாதகமற்ற அபிப்பிராயம் உள்ளதா என்று கேட்பதன்மூலம் SLOTS சாதகத்தன்மையை கணக்கிடுகின்றது: சாதகமான மற்றும் சாதகமற்ற பதில்களின் வித்தியாசம் நிகர சாதகத்தன்மை விகிதம் என்று மதிப்பிடப்படுகின்றது. தேசிய சனத்தொகையின் வயது, பாலினம், துறை, இனக்குழு, மதம், கல்வி, சமூகபொருளாதார நிலை மற்றும் இடத்தோடு மாதிரி பொருந்துமாறு அனைத்து மதிப்பீடுகளும் எடையிடப்பட்டன.

## நிதியுதவி

IHP, நாட்டின் சுகாதாரம், சமூக நிலைமைகள் மற்றும் மக்களின் கருத்துக்களில் ஏற்படும் மாற்றங்களை கணிப்பதற்காக SLOTS கருத்துக்கணிப்பை நடத்துகின்றது. கருத்துக்கணிப்பை உருவாக்க, ஆணையிட மற்றும் வடிவமைக்க IHP மட்டுமே பொறுப்பாகும், மேலும் அதற்கான முழுப் பொறுப்பையும் IHP ஏற்றுக்கொள்கின்றது. பேட்டிகள், IHP ஊழியர்களால் தினமும் தொலைபேசியினுடாக நடத்தப்படுகின்றன. இது தேசிய கள ஆய்வு மூலம் ஆட்சேர்க்கப்பட்ட அல்லது எழுமாறாக தொடர்புகொள்ளப்பட்ட கையடக்கத் தொலைபேசி அழைப்புகளை உள்ளடக்கிய பதிலளிப்பவர்களுடன்

நடாத்தப்படுகின்றது. SLOTS களப்பணியானது 2021 ஆம் ஆண்டு முதல் பல்வேறு நிதியுதவியாளர்களால் ஆதரிக்கப்படுகின்றது. இவர்கள் கேள்வி வடிவமைப்பு, தரவுப் பகுப்பாய்வு அல்லது அறிக்கையிடல் ஆகியவற்றில் எந்தப் பங்கையும் வகிப்பதில்லை. நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை (Neelan Tiruchelvam Trust), ஆசியா மன்றம் (Asia Foundation), ஐரோப்பிய ஆணையகம் (European Commission), ஐக்கிய இராச்சியத்தின் உடல் நலப் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் (UK National Institute for Health and Care Research), ஓபன் சொசையட்டி அறக்கட்டளை நிறுவனம் (Foundation Open Society Institute), யு. எஸ். எயிட் (USAID) வேலக்ஸ் ஸ்டிப்டங் அறக்கட்டளை(Velux Stiftung Foundation), அபுதாபி நியூயார்க் பல்கலைக்கழகம் (New York University Abu Dhabi) மற்றும் IHP பொது நலன் ஆராய்ச்சி நிதி ஆகியன நிதியளித்துள்ளன. மேலும் ஆய்வின் முடிவுகள், தற்போதைய மற்றும் முந்தைய நிதியுதவியாளர்களின் கருத்துக்கள் அல்லது நிலைகளை பிரதிபலிப்பதில்லை. மேலும் விரிவான தரவு மற்றும் முடிவுகளைப் பெற விரும்புவோர் IHP நிறுவனத்தை தொடர்பு கொள்ளலாம்.